# புகை-அற்ற ஒன்டேரியோ சட்டம் 2005
## எவ்வாறு இச்சட்டம் பாதிக்கிறது : ஹோட்டல், மோட்டல் மற்றும் விடுதிகளை

## அடிப்படைகள்

- புகை-அற்ற ஒன்டேரியோ சட்டம் (SFOA) மே 31, 2006 அன்று அமலுக்கு வருகிறது.
- இச்சட்டம் ஒன்டேரியோவின் தொழிலாளர்களையும், பொது மக்களையும் மறைமுகப் புகையின் (Second-hand smoke) இடர்களிலிருந்து பாதுகாக்கும் பொருட்டு, உள்ளடக்கப்பட்ட வேலையிடங்கள் மற்றும் உள்ளடக்கப்பட்ட பொது இடங்களில் புகை பிடித்தலை தடை செய்கிறது.

## ஹோட்டல், மோட்டல், விடுதிகள்

புகை பிடித்தல் அறைகளாக நியமிக்கப்பட்ட விருந்தினர் (வாடிக்கையாளர்) அறைகளை விடுத்து, ஹோட்டல்கள், மோட்டல்கள் மற்றும் விடுதிகளின் அனைத்து பிற இடங்களிலும் புகைபிடித்தல் தடை செய்யப்பட்டுள்ளது.

## புகை பிடித்தலுக்கான விருந்தினர் அறைகளை நியமித்தல்

- ஹோட்டல் நிர்வாகம் புகை பிடித்தலுக்கான விருந்தினர் அறையாக குறிப்பிட்ட ஒரு அறையை நியமித்தால் மட்டுமே, வாருந்தினர்கல் அந்த அறையில் புகை படிக்க இயலும்.
- நியமிக்கப்பட்ட விருந்தினர் அறை, தரையிலிருந்து மேற்கூறை வரையான சுவர்கள், மேற்கூரை, மற்றும் கதவுகளால் முழுமையாக உள்ளடக்கப்பட்டிருக்க வேண்டும், ஏனெனில் அப்பொழுதுதான் புகை பிடித்தல் தடை செய்யப்பட்ட அருகிலுள்ள பகுதிகளிலிருந்து விருந்தினர் அறையைத் தனிமைப்படுத்த இயலும்.
- பதிவு செய்யப்பட்ட விருந்துனர்கள் மற்றும் அவர்களின் அழைப்பேற்று வந்துள்ள விருந்துனர்கள் மட்டுமே, நியமிக்கப்பட்ட விருந்தினர் அறையில் புகைபிடிக்க இயலும்.

## உரிமையாள்ர்கள் மற்றும் பணியில் நியமிப்பவர்களின் கடமைப் பொறுப்புகள்

புகை பிடிப்பதற்கான விருந்தினர் அறைகளை வழங்குவதாயிருந்தால், ஹோட்டல் உரிமையாளர்கள் மற்றும் பணியிலமர்த்துபவர் அச்சட்டம் மற்றும் விதி முறைகளுக்கு இணங்கவேண்டும். ஹோட்டல், மோட்டல் அல்லது விடுதியின் மற்ற பிற பகுதிகளில்,

உரிமையாளர் அல்லது பணியிலமர்த்துபவர் கீழ்க்கண்டவற்றை பின்பற்றுவது அவசியமாகும்.

- புகை பிடித்தல் தடை செய்யப்பட்டுள்ளது என பொதுமக்கள் ஊழியர்கள் மற்றும் விருந்தினர்கள் அறிந்துள்ளதை உறுதிபடுத்த வேண்டும்.
- சாம்பல் கிண்ணங்களையும் மற்றும் சாம்பல் கிண்ணங்களாக உபயோகிக்கப்படுபவற்றையும் அப்புறப்படுத்த வேண்டும்.
- ஹோட்டல், மோட்டல் அல்லது விடுதியில் (நியமிக்கப்பட்ட விருந்தினர் அறையை விடுத்து) எவரும் புகை பிடிக்காமலிருப்பதை உறுதி படுத்த வேண்டும்.
- இவ்விதிகளை பின்பற்றாதவர்கள் ஹோட்டல், மோட்டல் அல்லது விடுதியில் தங்காமலிருப்பதை உறுதி படுத்துங்கள்.
- *நோ ஸ்மோகிங் (புகை பிடிக்கக்கூடாது)* குறிகளை அனைத்து நுழைவு வாயில்கள், வெளியேறும் வழிகள், கழிப்பிடங்கள் மற்றும் மற்ற பிற பொருத்தமான இடங்களில், புகை பிடித்தல் தடை செய்யப்பட்டுள்ளதை அனைவரும் அறியும் வண்ணம் ஒட்டி வைக்கவும். தேவையான அடையாளக் குறிகளைப் பெறுவது குறித்த தகவலுக்கென, தயவுசெய்து உங்கள் உள்ளூர் அரசு சுகாதாரப் பிரிவைத் தொடர்பு கொள்ளவும்.

## அமலாக்கம்

சட்டத்தை அமல் செய்யும் பொருட்டு ஹோட்டல்கள், மோட்டல்கள் மற்றும் விடுதிகளில் உள்ளூர் அரசு சுகாதாரப் பிரிவுகள் சோதனைகளை மேற்கொண்டு, குற்றசாட்டுகளை விசாரிக்கும்.

## அபராதங்கள்

சட்டத்தின் இப்பிரிவை மீறுபவர்களுக்கு விதிக்கப்படக்கூடிய உயர்ந்தபட்ச கார்ப்பரேட் (கம்பனிகளுக்கென) அபராதம் பட்டியலிடப்படவில்லை. அதாவது அபராதத் தொகையை நிர்ணயிப்பது அமைதி பேணும் நடுவரின் (Justice of the peace) பொறுப்பாகும். தனி மனிதர் ஒருவருக்கு உயர்ந்தபட்சம் $5,000 அபராதமாக விதிக்கப்படக்கூடும்.

இந்த தகவல் தாளை ஒரு விரைவு நோக்கீட்டு உபயோகத்திற்கென மட்டுமே பயன் படுத்த பரிந்துரைக்கப் படுகிறது. கூடுதல் தகவலுக்கென, தயவு செய்து உங்கள் உள்ளூர் அரசு சுகாதாரப் பிரிவைத் தொடர்பு கொள்ளவும்.

கட்டணமற்ற தொலைபேசி எண்களில் தொடர்பு கொண்டும் நீங்கள் தகவல் பெறலாம்.

- **INFOline** 1-866-396-1760
- **TTY** 1-800-387-5559



Ontario

வேலை நேரம் : திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை.

புகை அற்ற ஒன்டேரியோ சட்டம் பற்றிய கூடுதல் தகவலுக்கென, தயவு செய்து சுகாதார முன்னேற்றத்திற்கான ஒன்டேரியோ அமைச்சக வலையகத்திற்கு வருகை தாருங்கள்: http://www.mhp.gov.on.ca/english/health/smoke_free/legislation.asp.

மே 2006



Ontario